செ.வெ.எண்.78 நாள்: 08.03.2021

**நீலகிரி மாவட்டத்தில் நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2021-ஐ முன்னிட்டு, அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில், 3 சட்டமன்ற தொகுதிக்கு முதற்கட்ட சுழற்சி முறையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை ஒதுக்கீடு செய்து, சம்மந்தப்பட்ட சட்டமன்ற தொகுதிக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை அனுப்பி வைக்கும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட்திவ்யா இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டார்.**

---

நீலகிரி மாவட்டத்தில் நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2021-ஐ முன்னிட்டு, மாவட்ட ஆட்சியர் அலுவலக தேர்தல் பிரிவில், அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில், 3 சட்டமன்ற தொகுதிக்கு முதற்கட்ட சுழற்சி முறையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை கணினி மூலம் ஒதுக்கீடு செய்யும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட்திவ்யா இ.ஆ.ப., அவர்கள் இன்று (08.03.2021) நேரில் பார்வையிட்டார்.

அதனை தொடர்ந்து, மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட்திவ்யா இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள வாக்குப்பதிவு இயந்திரம் கிடங்கினை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டு, கணினி மூலம் சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை, அந்தந்த சட்டமன்ற தொகுதிகளுக்கு அனுப்பி வைக்கும் பணிகளை நேரில் பார்வையிட்டார்.

இந்நிகழ்வில், மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட்திவ்யா இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

நீலகிரி மாவட்டத்தில் வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலில் 108 உதகமண்டலம் சட்டமன்ற தொகுதியில் (308 வாக்குச்சாவடிகள்) 98,353 ஆண் வாக்காளர்களும், 1,06,775 பெண் வாக்காளர்களும், இதர 10 வாக்காளர்களும் என மொத்தம் 2,05,138 வாக்காளர்களும், 109 கூடலூர் சட்டமன்ற சட்டமன்ற தொகுதியில் (280 வாக்குச்சாவடிகள்) 91,301 ஆண் வாக்காளர்களும்,

99,999 பெண் வாக்காளர்களும், இதர 7 வாக்காளர்களும் என மொத்தம் 1,91,307 வாக்காளர்களும், 110 குன்னூர் சட்டமன்ற சட்டமன்ற தொகுதியில் (280 வாக்குச்சாவடிகள்) 92,108 ஆண் வாக்காளர்களும், 96,496 பெண் வாக்காளர்களும், என மொத்தம் 1,88,604 வாக்காளர்கள் என மொத்தம் 3 சட்டமன்ற தொகுதியில் 2,81,762 ஆண் வாக்காளர்களும், 3,03,270 பெண் வாக்காளர்களும், இதர 17 வாக்காளர்களும் ஆக மொத்தம் 5,85,049 வாக்காளர்கள் உள்ளனர்.

மேலும் நமது மாவட்டத்தில் 3 சட்டமன்ற தொகுதியில் 868 வாக்குச்சாவடிகள் உள்ளது. முதல்நிலை சரிபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது BUs – 1508, CUs-1140 மற்றும் VVPATs- 1197- என மொத்தம் 3,845 இயந்திரங்கள் உள்ளது. அந்தந்த சட்டமன்ற தொகுதியில் உள்ள பொதுமக்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் VVPATs குறித்து தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை தலா BUs-45, CUs-45 மற்றும் VVPATs-45 அனுப்பி வைக்கப்பட்டு விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இன்று வாக்குப்பதிவு இயந்திரங்கள் கிடங்கில், பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை, அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில், கணினி மூலம் முதற்கட்ட சுழற்சி முறையில் மூன்று சட்டமன்ற தொகுதிகளுக்கு BUs – 1042, CUs-1042 மற்றும் VVPATs- 1147- என மொத்தம் 3,231 இயந்திரங்கள் ஒதுக்கீடு செய்து அனுப்பி வைக்கும் பணிகள் நடைபெறுகிறது. இதில் BUs – 120 சதவீதமும், CUs-120 சதவீதமும் மற்றும் VVPATs- 132 சதவீதமும் உள்ளது. கூடுதல் ஆட்சியர் அலுவலகத்திலுள்ள வாக்குப்பதிவு இயந்திர கிடங்கில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் அந்தந்த சட்டமன்ற தொகுதிகளுக்கு அனுப்பி வைக்கும் பணிகள் நடைபெறுகிறது. இன்று மாலை 6 மணிக்குள் உதகை சட்டமன்ற தொகுதிக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை பிரிக்ஸ் பள்ளியிலும், கூடலூர் சட்டமன்ற தொகுதிக்கான மின்னணு வாக்குப்பதிவு

இயந்திரங்களை புனித தாமஸ் பள்ளியிலும், குன்னூர் சட்டமன்ற தொகுதிக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை பிராவிடன்ஸ் பெண்கள் கல்லூரி ஆகிய வாக்குப்பதிவு இயந்திர பாதுகாப்பு கிடங்குகளில் பாதுகாப்பாக வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் சிசிடிவி கேமரா, வெப்கேமரா மற்றும் துப்பாக்கி ஏந்திய காவலர்களுடன் முழுமையான மற்றும் சரியான பாதுகாப்புகளுடன் வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்படும்.

07.03.2021 அன்று 6 எண்ணிக்கையில் ரூ. 6,74,000/- பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதுவரையில் மொத்தம் ரூ.75,81,200/- பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் நடத்தை விதிமுறைகள் மீறியதாக 3 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.எஸ்.நிர்மலா, உதகை சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்/ சார் ஆட்சியர் டாக்டர்.மோனிகாரானா இ.ஆ.ப., குன்னூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்/ சார் ஆட்சியர் திரு.ரஞ்சித்சிங் இ.ஆ.ப., கூடலூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்/ வருவாய் கோட்டாட்சியர் திரு.ராஜ்குமார், துணை ஆட்சியர் (பயிற்சி) திருமதி.லோகநாயகி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பொது (பொறுப்பு) திரு.முகம்மது குதுரதுல்லா மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள், அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.